Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 356/2023**

**Deposition of PW.3 (LW.6)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குழந்தை ராஜ் | ஜாதி | : | |
| த/பெ | : | மரியராஜ் | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | பொன்னிமான்துரை | சமயம் | : | |
| தாலுகா | : | திண்டுக்கல் | வயது | : | 40 /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.11.2025.

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் பொன்னிமாந்துரையில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையெழ்த்து மற்றும் அத்தாட்சியில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையது அல்ல.தற்பொழுது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற அழைப்பாணையில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி நீதிமன்ற அனுமதியுடன் அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை**

பொன்னிமான்துரையை சார்ந்த வேளாங்கன்னி மகன் அருளானந்தம் என்பவரை தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் பொன்னி மான்துரையில் எந்த தெருவில் குடியிருந்தேன் என்றால் அந்தோணியார் கோவில்தெருவில் குடிருந்து வருகிறேன்.பொன்னிமான்துரை தெற்கு தெருவில் குடியிருக்கும் நடராஜா மகன் பாரதிராஜா என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. 26.12.2016 ஆம் தேதி திண்டுக்கல் தாலுகா போலீசார் காலை 10.30 மணிக்கு திண்டுக்கல் பைபாஸ் சாலை கொட்டப்பட்டி பிரிவு அருகே வாகன தணிக்கை செய்து கொண்டிருந்ததாகவும், அந்த வழியாக TN 57 AC 3307 என்ற மோட்டார் சைக்கிளில் வந்த நபரை பிடித்து விசாரிக்க அவர் முன்னுக்கு பின் முரணாக பதிலளித்ததாகவும், பின்னர் அவரது பெயர் பாரதிராஜா என்று கூறியதாகவும், மேற்படி பாரதிராஜா தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், அதை திண்டுக்கல் தாலுகா காவல் ஆய்வாளர் அருளானந்தம் மற்றும் எனது முன்னிலையில் பதிவு செய்து என்னிடமும் அருளானந்தத்திடமும் சாட்சி கையெழுத்து பெற்றதாகவும், அதன் முன்னிட்டு அன்றைய தினம் 16.00 மணிக்கு பொன்னிமான்துரை தெற்கு தெருவில் உள்ள பாரதிராஜா வீட்டு முன்பு வைத்து பாரதி ராஜா ஆஜர் செய்த சுமார் 1 1/2 பவுன் தங்க செயின் ஒன்றை திண்டுக்கல் காவல் ஆய்வாளர் அருளானந்தம் மற்றும் எனது முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றியதாகவும், அதில் நானும் அருளானந்தமும் சாட்சி கையொப்பம் செய்ததாக சொன்னால் சரியல்ல. எதிரி பாரதிராஜா எனது ஊரைச் சேர்ந்தவர் என்பதால்

எதிரிக்கு ஆதரவாக அவரை காப்பாற்றும் நோக்கில் ஒப்புதல் வாக்குமூலம் , அத்தாட்சியில் உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது அல்ல என பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

**Sd/-Thiru. S. Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor